**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# சீஷத்துவம்

'சீஷத்துவம் என்பது நித்தியத்தை முடிவாகக் கொண்ட ஒரு மூலதனமும் நம்பமுடியாத ஆச்சரியமான சன்மானத்தை கொடுக்கும் வெகுமானமும் ஆகும்'

**அறிமுகம்**
பிரதான கட்டளையானது இருபக்க நாணயம் போன்றது. வங்கித்தாள் நாணயமாவது, குற்றியாவது இருபுறமும் சட்ட வரையறைப்படி அச்சிடப்பட்டு இருந்தால் அது பெறுமதியை பெறுவதுபோல, பிரதான கட்டளையும் கீழே கூறப்பட்ட வேத வார்த்தைகளின்படி இரண்டு வகைகளை உள்ளடக்குகிறது.

மாற்கு16:15 – *நீங்கள் உலகமெங்கும்போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.*

மத்தேயு 28:19 – *நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி...*

இந்த இரண்டு கட்டளைகளும் ஒரு பிரதான கட்டளையின் இரண்டு பகுதிகளாகும். மிகவும் கவனமாய் அவதானிப்பதனூடாகவும், கீழ்ப்படிதலினூடாகவும் மாத்திரமே தேவனுடைய பிரதான கட்டளையை எமது வாழ்வில் நிறைவேற்ற முடியும். இதனால் எமது வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறோம்.

**சுவிசேஷத்தை பிரசாரம் செய்தல்**

மாற்கு 16:15 இன்படி நற்செய்தியை பிரசங்கிப்பதற்கான தெளிவான முதலாவது படி சுவிசேஷம் அறிவித்தல் ஆகும். இந்தக் கட்டளையானது தனிப்பட்டவருக்கல்ல, கிறிஸ்துவின் முழு சரீரத்திற்கும் கொடுக்கப்பட்டது. ஆகவே, கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் இந்த சுவிசேஷத்தை பிரசாரம் செய்து இரட்சிக்கப்படாதவர்களை தேவ இராஜ்ஜியத்திற்கு கொண்டுவர வேண்டும்.

சுவிசேஷம் அறிவிப்பதற்கான வரமும் சுவிசேஷகரின் விசேட அழைப்பும் கிறிஸ்துவின் சரீரத்தில் இரண்டு வித்தியாசமான பகுதிகளாகும். இந்த இரண்டையும் சேர்த்து குழப்பிக் கொள்ளக்கூடாது. அப்போஸ்தலர் 1:8 இல் பரிசுத்த ஆவியானவர் 120 பேரான விசுவாசிகளிடத்தில் வந்தபோது, அவர்கள் சாட்சிகளாய் இருப்பதற்கு வல்லமையை பெற்றுக்கொண்டார்கள். சாட்சியாயிருத்தல் என்பது ஒருவனுடைய வாழ்க்கை அவனுடைய அல்லது அவளுடைய பின்பற்றுதலின் அனுபவத்தில் ஆதாரமாய் இருக்கிறது. அதைப்போலவே, இயேசு கிறிஸ்துவுக்குள் பரிசுத்த ஆவியை பெற்ற ஒவ்வொரு விசுவாசியும் தேவனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாய் இருக்கவேண்டும். எபேசியர் 4:11 இல் சொல்வதன்படி கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக நமக்கு கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, சுவிசேஷம் பிரசாரம் செய்வதற்கான வரங்களை, சாட்சியாய் இருத்தல் என்பதோடு இணைத்து குழப்பிக்கொள்ளக்கூடாது.

ஒரு சுவிசேஷகர் என்பவர் கிறிஸ்துவின் சரீரத்தில் விசாலமான பகுதியை கொண்டிருக்கிறார். ஒரு விசுவாசி எங்கேயிருந்தாலும் அவன் அல்லது அவள் ஒரு சாட்சி – வீட்டில், வேலைத்தளத்தில், அல்லது மற்றைய இடங்களில் திருத்தூதுப்பணி இடமாக மாறுகிறது. விசுவாசி திருத்தூதுப்பணியாளர் ஆகிறார்.

எபேசியர் 4:7-16 ல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஊழியத்தின் முழுமையான வளர்ச்சிக்கு தேவையான ஐந்து விதமான ஊழியங்கள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. புதிதாக இரட்சிப்படைந்த யாராவது ஒருவர், தேவனுடைய வார்த்தையில் சரியாக கவனம் செலுத்தாவிடில் அவருடைய நிலை முந்தைய நிலையைவிட மோசமாகிவிடும். இயேசு இதை ‘‘இரட்டிப்பான இழப்பு’’ என்கிறார்.

மத்தேயு 23:15 குறிப்பிடப்படுவதன்படி:

> *மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவேளை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்.*

உலகம் பார்க்கிறவிதமாய் சுவிசேஷ பிரசாரத்தையோ, சுவிசேஷகரையோ நாம் பார்க்கக்கூடாது. முறாக, வேதம் அதைப்பற்றி என்ன சொல்கிறது என ஆராய்ந்து பார்ப்போம்.

இயேசு சுவிசேஷகர்களை ‘‘மனிதர்களை பிடிக்கிறவர்கள்’’ என அழைக்கிறார். அவர் அப்போஸ்தலர்களை அழைத்து, ‘‘நான் உங்களை மனிதர்களை பிடிக்கிறவர்களாய் மாற்றுவேன்.’’ என்கிறார். மீன்கள் ஆறுகளில் அல்லது கடலில் பிடிக்கப்படுகிறது. ஒருவர் மனமாற்றம் அடையும்போது அவர் ஒரு உள்ளூர் சபையில் சேர்த்து கொள்ளப்படுவது முக்கியமாகும். ஆவர் ஆவிக்குரிய ரீதியில் சீஷராக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இது அப்போஸ்தலருடைய பயிற்சியாகவும் காணப்பட்டது. நவீன கால சுவிசேஷகர்கள் மத்தியில் இது கருதப்படுவதில்லை.

எபேசியர் 4:11 குறிப்பிடப்படுவதன்படி 5 விதமான ஊழியங்கள்
அப்போஸ்தலர்
தீர்க்கதரிசி
சுவிசேஷகர்
மேய்ப்பர்
போதகர்

இந்த வரிசைப்படுத்தலானது அதன் முக்கியத்துவத்தின் அடிப்படையில் 1 கொரிந்தியர் 12:28 சொல்லப்பட்டபடி அமைந்துள்ளது. ஆகவேதான் தேவன் சபையில் இவர்களை நியமித்திருக்கிறார் என்று சொல்கிறோம். முதலாவது அப்போஸ்தலரையும் இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது ஆசிரியர்களும் அதன்பிறகு அற்புதங்களையும், குணப்படுத்தல் வரங்களைளும் (அது சுவிசேஷகர்களை குறிக்கிறது) பின்பு மேய்ப்பத்துவத்தை குறிப்பிடுகிறார். (‘‘கப்பல் ஓட்டுநர்கள்’’ போதகர்கள் மேய்ப்பர்களாக காட்டப்படுகிறது).

## சீஷர்களை உருவாக்குதல்

எல்லா ஜாதிகளிலும் நாம் சீஷர்களை உருவாக்க வேண்டும் என மத்தேயு 28:19 இல் தெளிவாக சொல்லப்படுகிறது. (ஜாதிகள் என்று சொல்லும்போது வேதாகமம் பொதுவான ஜனங்களை ஜாதிகள் என்றே அர்த்தப்படுத்துகிறது. பலவிதமான ஜனக்கூட்டம் என்று கொள்ளப்படுகிறது.) மனமாற்ற மடைந்தவர் ஒவ்வொருவரும் ஒப்படைக்கப்பட்டவரால் சீஷராக மாற்றமடைய வேண்டும். ஆயினும் இந்த நிகழ்காலத்தில் சுவிசேஷம் குறைந்த பெறுமதிகொண்டதாக உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்படுவதால் உண்மையான சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவது இல்லாமல் போகிறது.

கீழே சொல்லப்படும் வார்த்தைகள் அதைக் குறித்ததாகும்:

*''அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்." (மத்தேயு 3:1-2)*

யோவான் ஸ்நானன் பிரசங்கித்து சொன்னதாவது, ''தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது மனந்திரும்புங்கள்."

*அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். (மத்தேயு 4:17)*

இயேசுவும் இந்தப் பிரசங்கத்தைச் செய்தார். புதிய ஏற்பாட்டின் முதல் வாக்குத்தத்தமானது மத்தேயு 1:21 ''அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் **அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்** என்றார்." முதலாவது நீங்கள் உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி இரட்சிக்கப்படல் வேண்டும். இரண்டாவது கர்த்தராகிய இயேசு இரட்சகர் என்று விசுவாசிக்க வேண்டும்.

பெந்தகோஸ்தே தினத்தன்று பேதுரு பிரசங்கம் பண்ணியதிலிருந்து ஆதி சபை தேவனுடைய வார்த்தையை அறிந்துகொண்டது.

*''பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக் கிறது என்று சொல்லி," (அப்போஸ்தலர் 2:38-39)*

அதன்பிறகு, எபேசியருக்கு மூன்று வருடங்களாக பவுல் பிரசங்கம் பண்ணினார். அப்போஸ்தலர் 20:21 இல் நாம் பார்ப்பதன்படி: *தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.*

நீங்கள் உண்மையாக உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பாவிடில் உங்கள் பாவங் களிலிருந்து விடுதலையாகாவிடில் நீங்கள் உண்மையான விசுவாசி அல்ல. இதனால்தான் பெயரளவிலான எண்ணிக்கையிலான விசுவாசிகளாக மாத்திரம் விசுவாசிகள் காணப் படுகிறார்கள். அவர்களுடைய விசுவாசம் சர்ச்சைக்குரியதாக காணப்படுகிறது. மனந்திரும்பாத அல்லது உள்ளத்தில் மாற்றமில்லாத தீய வழிகளில் இருந்த போதும் தங்களை விசுவாசிகள் என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

லூக்கா 15:7 இல் என்ன சொல்லப்படுகிறது என்று பார்ப்போம்.

> *அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

இதற்கு ஒத்த உதாரணமாகிய சக்கேயுவினுடைய உதாரணம் லூக்கா 19:1-10

> *சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்.(வசனம் 8)*
>
> *இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருகிருக்கிறானே. (வசனம் 9)*

மேலே சொல்லப்பட்ட வசனங்களின்படி சக்கேயுவின் ஈடுசெய்ய முன்வந்த மனந்திரும்புதலின் பின்பு மாத்திரமே அவனுடைய முழுவீட்டுக்கும் இரட்சிப்பு வந்தது என்று இயேசு சொல்லுகிறார். ஆகவே, இப்படியான மனந்திரும்புதல் உண்மையான மாறுதலை கொண்டு வருகிறது. இரட்சிக்கப்பட்ட பின்பு அவன் அல்ல அவள் தேவனுடைய நோக்கத்தின்படியும், திட்டத்தின்படியும் சீஷத்துவத்தில் வழிநடத்தப்பட வேண்டும். சுவிசேஷ பிரசாரம் செய்தலானது சீஷத்துவத்திற்கு வழிநடத்தப்படாவிடில் அது முழுமையற்ற ஒரு காரியமாகும்.

**தண்ணீர் ஞானஸ்நானம்**

ஒருவன் மனமாற்றமடைந்தவுடன் அவன் அல்லது அவள் தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். தண்ணீர் ஞானஸ்நானமாவது, ஒரு புதிய விசுவாசிக்கு முதலாவதும், அடிப்படையானதும் ஆகும். மத்தேயு 28:19 (*ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து*) மாற்கு 16:16 (*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்*) தண்ணீர் ஞானஸ்நானத்தின் அவசியத்தை நமக்கு இந்த வசனங்கள் உணர்த்துகிறது. அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் பெந்தகோஸ்தே தினத்தன்று பேதுரு ஞானஸ்நானத்தின் அவசியத்தை தெளிவாக சொல்லியிருக்கிறார். அதைப்போலவே யோவான் 3:5 இல், தண்ணீராலும், ஆவியாலும் ஒருவன் மறுபடி பிறவாவிட்டால் பரலோக ராஜ்யத்திற்கு பிரவேசிக்க மாட்டான் என்று இயேசு குறிப்பிட்டுச் சொல்கிறார். (உங்களுக்கு தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி விபரம் தேவையானால் தலைப்பில் ஞானஸ்நானம் என்று குறிப்பிட்டு எனக்கு எழுதி அனுப்புங்கள்) அதன்பிறகு அவன் அல்லது அவள் தன் வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும் அவருடைய சீஷனாக அவரை பின்பற்ற வேண்டும்.

**சீஷத்துவத்திற்கான நிபந்தனை**

லூக்கா 14:25-35, இல் சீஷத்துவதிற்கான நிபந்தனைகளை தெளிவாய் விபரிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பகுதியில் சீஷனாக இருப்பதற்கான நிபந்தனைகளை இயேசு ஓரு உவமையாகச் சொல்கிறார். ஏதாவது ஒரு காரியத்தை செய்ய முடியாமல் போவதற்கு முன் அதைப்பற்றி கணக்கிட்டுச் செலவை கிரகித்துப்பார்த்தல் எவ்வளவு முக்கியம் என்பதை இக்கதையில் சொல்லப்படுகிறது. உதாரணமாக ஒரு கட்டிடத்தை கட்டிமுடிப்பதற்கான செலவை கணக்கிட்டுப் பார்த்தலைப்போல அது அமைகிறது. ஒரு கட்டிடத்தை கட்டுமுன் அதற்கான செலவீனத்தை நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டுமென இயேசு விரும்புகிறார். அதைப்போலவே, இயேசுவின் சீஷனாக இருப்பதற்கும், அதற்கான கிரயத்தையும் நீங்கள் கணக்கிட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

இயேசு சீஷனாயிருப்பதற்கு 3 நிபந்தனைகளை இவ்விடத்தில் குறிப்பிடுகிறார்:

1. உறவுகளை விட்டுவிட வேண்டும். அது இயேசுவை பின்பற்றுவதற்கு தடைக்கல்லாய் அமையும். (வசனம் 26)
2. ஒவ்வொருநாளும் தன்னைத்தானே வெறுப்பதற்கு விருப்பமுள்ளவனாய் இருக்கவேண்டும். (வசனம் 27)
3. தனக்குண்டானவைகளை எல்லாம் விட்டுவிடுவதற்கு தயாராக இருக்க வேண்டும். (வசனம் 33)

லூக்கா 14:26 – *யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.*

## 1. உறவுகளை தவிர்த்தல் அல்லது பிரிதல்:

முதலாவது நிபந்தனையானது நாம் எமது இயல்பான உறவுமுறைகளை எந்த உறவாயிருந்தாலும் விட்டுவிடல் அல்லது பிரிதல் வேண்டும் என்றே வேண்டப்படுகிறது. எமது வாழ்விலுள்ள எந்த உறவை விடவும் இயேசுவுக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். ‘‘வெறுத்தல்’’ எமது பெற்றோரையும் மற்ற உறவுகளையும் விட்டுப்போவது என்று அர்த்தமல்ல. மற்றைய எதையும் விட தேவனை நாம் நேசிக்க வேண்டும். நாம் அப்படி செய்யும் போது தேவன் அவருடைய பரிசுத்தமான உன்னத அன்பை நம்மீது ஊற்றுவார். மற்றவர்களை அவர்கள் இருக்கும் விதமாக நேசிக்க நம்மால் முடிகிறது.

லூக்கா 14:26, இல் இப்படியாகச் சொல்கிறது. ‘‘*யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும்* ***வெறுக்காவிட்டால்*** *எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.*’’

தனிப்பட்ட ரீதியில் நான் அநேகரை அறிந்திருக்கிறேன் தேவனால் அழைக்கப்பட்ட போதிலும் பெற்றோர் நிமித்தமோ, மனைவி நிமித்தமோ, பிள்ளைகள் நிமித்தமோ, மற்ற காரியங்களினாலோ அந்த அழைப்பை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறார்கள்.

நாம் இயேசுவை எல்லா சந்தர்ப்பங்களிலும் நமது முன்மாதிரியாகக் கொள்வது பொருத்தமானது. இயேசு இப்பூமியிலிருக்கும்போது தன் தாய்க்கு கீழ்ப்படிந்து சிறிது காலம் தன் தாயை பராமரித்தார். ஆனால் கலிலேயாவின் திருமண விருந்தில் கலந்துகொண்ட போது தன் தாயிடம் ‘‘ஸ்தீரியே எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லையே’’ என்று சொல்லியிருப்பதால் அவர் தன் தாயிடம் இருந்து தூரமாகிறார் என்று அர்த்தப்படுகிறது. (யோவான் 2:4)

தன் சகோதர்களுடனான உறவில், இயேசு பேதுருவுடன் அன்பான முறையில் பேசுகிறார். ஆனால் பேதுரு இயேசுவை சிலுவைக்கு செல்ல வேண்டாம் எனக்கூறிய போது, இயேசு அவரைக் கடிந்துகொண்டு, ‘‘அப்பாலே போ சாத்தானே’’ என்றார். இயேசு பேதுருவை நோக்கி, ‘‘யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான். மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்’’ என்றார். ஆனால் அடுத்து கொஞ்ச நேரத்தில் தேவனிடமிருந்து வராத காரியத்திற்காக இயேசுவால் கடிந்துகொள்ளப்பட்டார். (மத்தேயு 16:13-23) இதே இயேசு அவருடைய உயிர்த்தெலுதலின் பின்பு பேதுருவிற்கு தோன்றி அவரைப் பெலப்படுத்தி தன் சபையை அவருக்கு பொறுப்புக் கொடுத்தார்.

மேலும், இயேசுவின் திருத்தூதுப்பணி வசனத்தை சுருக்கமாக ஒரு வசனமாக யோவான் 6:38ஐ கூறலாம். ‘‘என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கிவந்தேன்.’’ இயேசுவுக்கு ஒரே ஒரு நோக்கமும் திட்டமும் மாத்திரமே இருந்தது. அது தன்னை அனுப்பினவரும் தன் தகப்பனுமாகிய தேவனுடைய சித்தத்தை செய்வதே ஆகும். அதனையே இயேசு தன் சீஷரிடமும் எதிர்ப்பார்க்கிறார்.

சங்கீதக்காரனுடைய உணர்வை நாம் திரும்பச் சொல்லக்கூடுமானால், ‘‘*பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை.*’’ (சங்கீதம் 73:25) நாம் உண்மையாக சீஷத்துவத்திற்கான முதலாவது நிபந்தனையை நிறைவேற்றி விட்டோம்.

யோவான் 14:21 இல் மிகவும் தெளிவாகச் சொல்கிறது. *நாம் அவரில் அன்பு செலுத்துகிறவர்களானால் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வோம். அவருடைய கற்பனைகளை கைக்கொள்வோம்.* தேவனை நேசிக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் மிக முக்கிய பங்கை வகிக்கிறார்கள்.

## 2. சிலுவையை சுமந்து உங்கள் சொந்த வாழ்க்கையை வெறுத்தல்:

லூக்கா 14:27 – *தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.*

இங்கே, சிலுவையை சுமத்தல் என்பது இயேசு சுமந்து சென்றது போல சுமந்து செல்தல் என்று அர்த்தப்படாது. மாறாக, உங்கள் சொந்த விருப்பங்களை வெறுத்தல் என்பதையே அர்த்தப்படுத்துகிறது. – உங்கள் சொந்த விருப்பங்களை நிறைவேற்றல் அல்லது தேவ சித்தத்தை நிறைவேற்றல்.

இப்பிரபஞ்சமானது எம் ஒவ்வொருவருக்கும் இவ்வுலக இன்பங்களுக்கு அதிக ஆசையினால் வேண்டச்செய்கிறது. ஆனால் வேதம் நாம் தேவனுடைய சித்தத்தை செய்ய வேண்டுமென வலியுறுத்துகிறது. வேதாகமம் ''மாம்சம்' என்றழைக்கிற எமது சொந்த வாழ்க்கையே கிறிஸ்தவ வாழ்க்கைக்கு பிரதான எதிரி. எமது சொந்த விருப்பங்களை நிறைவேற்ற எம்மை சோதிக்கிறதான தீய காரியங்களின் கலஞ்சியமாக காணப்படுவது எமது மாம்சமே ஆகும் - சொந்த இலாபங்களை தேடுகிற, சுய கனத்தை தேடுகிற, சுய விருப்பத்தை தேடுகிற, சுயவழிகளை மற்றும் பல காரியங்களை தேடுகின்றமை.

இந்தப்பிரமாணமானது லூக்கா 9:23 இல் குறிப்பிடப்படுகிறது: ''பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.'' இயேசு, ''அநுதினமும்'' என்னும் வார்த்தையில் தெளிவாகச் சொல்கிறார் 24 மணித்தியாலமும் விசுவாசிகளில் ஒருவராக கெட்டியான இருதயத்துடன் இருத்தலாகும். எபிரேயர் 3:13 ஐ மிகஅவதானமாகப் பார்த்தால், 24 மணித்தியாலமும் நாம் கடினமான இருதயத்துடன் இருக்கக்கூடும் என புரிந்துகொள்ளலாம். இதைப்பற்றி விபரமாக பின்வரும் பாடங்களில் அவதானிப்போம்.

## 3. சொத்துக்களை விட்டுவிடுதல் :

லூக்கா 14:33 – *அப்படியே, உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.*

சொந்த காரியங்களை கவனிக்குமிடத்து, எமக்காக எதையும் சொந்தமாக்கிக்கொள்ளக் கூடாது. ஆழகான வேதாகம வசனமானது நிர்வகிப்பவர் அல்லது மேற்பார்வையாளர் என நம்மைச் சொல்கிறது. அதாவது நீங்கள் அதை சொந்தமாக்க முடியாது மாறாக நீங்கள்

கொண்டிருக்கும் அனைத்திற்கும் பொறுப்பு வகிப்பவராகவும், கணக்கு ஒப்புவிப்பவராகவும் இருக்கவேண்டும்.

ஆபிரகாமுடைய வாழ்க்கையில் இதனை தெளிவாக காணலாம். தேவன் ஆபிரகாமை அவருடைய 75 வது வயதில் சந்தித்து அவருக்கு ஒரு குமாரனை தருவேன் என்றார். அந்த 75வது வயதில் குழந்தையை பெற்றெடுப்பது கூடாத காரியம். அதன்பின்பனதாக, அடுத்த 24 வருடங்களுக்கு அவருடைய வாழ்க்கையில் ஒன்றும் நடக்கவில்லை. அது ஆபிரகாமுக்கு எப்படி இருந்திருக்கும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். பின்பு, அவர் 99 வயதாயிருக்கையில், திரும்ப தேவன் அவரை சந்தித்து ஒரு குமாரனைத் தருவேன் என்கிறார். இது சாத்தியப்படக்கூடிய தன்மை இல்லாதிருப்பினும், அடுத்த வருடத்திலே அவர் ஒரு குமாரனை உடையவனாயிருந்தார். எப்படியாயினும் இந்தப்பிள்ளை தான் பெற்றுக்கொண்டது தன்னுடைய முயற்சியினால் அல்லது ஆற்றலினால் ஆனதல்ல என்று ஆபிரகாம் தெளிவாய் அறிந்திருந்தார்.

ஈசாக் அவருடைய மகன் - அவருடைய சொந்தம். பின்பு ஒருநாள், ஈசாக்கை தனக்கு பலியாக கொடுக்கும்படி கேட்கிறார். ஆபிரகாம் ஈசாக்கை பலிபீடத்தில் பலியாக வைத்து பலி செலுத்த ஆயத்தமாகிறார். ஆனால் தேவன் அவரை இடைப்பட்டு இந்தப்பலி அவசியமானதல்ல என்றும் அவர் தனக்கு கீழ்ப்படிவதை அறிந்து கொண்டதாகவும் கூறினார். (ஆதியாகமம் 22). அதன் பின்பதாக, ஈசாக் தன் வீட்டில் இருந்தாலும், அவன் தன்னுடையவனல்ல தேவனுக்குச் சொந்தமானவன் என்றும் உணர்ந்து கொண்டார்.

நாம் அடுத்த உதாரணமாக மோசேயை எடுத்துக்கொள்ளலாம்: எகிப்தியனை கொன்ற பின்பதாக எகிப்தை விட்டு ஓடி, அவருடைய மாமனாருடன் 40 வருடங்கள் தங்கியிருந்தார். இந்த நேரத்தில், தேவன் அவரை எரிகின்ற முற்செடியில் அவரை சந்தித்தார். யாத்திரயாகமம் 3 அதிகாரத்தில் இதனை காணலாம். மோசையிடம் தேவன் ‘‘உன் கையில் என்ன இருக்கிறது’’ என்று கேட்கிறார். அதற்கு அவர் ‘‘அது ஒரு கோல்’’ என்று பதிலளிக்கிறார். தேவன் அதை கீழே போடும்படி சொன்னபோது அதன்படி அவர் கீழே போடும் போது அது பாம்பாக மாறியது. தேவன் அதனை வாலில் பிடிக்கும்படி சொன்னபோது அப்படிச்செய்ய அது மறுபடியும் கோலாக மாறியது. இச்சம்பவத்தின் பின்பதாக, வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி அது தேவனுடைய தடி என்றழைக்கப்பட்டது. – மோசேயினுடையது அல்ல. (யாத்திரயாகமம் 4:20)

ஊங்கள் கையில் என்ன இருக்கிறதோ அதனை தேவனுடைய பலிபீடத்தில் நீங்கள் போடும்போது, தேவன் அதனை அவருடைய மகிமைக்காக அழகான பரிசாக மாற்றுவார். 40 வருட வனாந்தரப்பாதையில் 3 மில்லியன் ஜனங்களுக்கு அந்த கோல் போதுமானதாக இருந்தது.

இதுவே நீங்கள் உங்கள் சொத்துக்களையெல்லாம் விட்டுவிட வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறது. எமக்கு உண்டானவைகளையெல்லாம் தேவனுடைய பலிபீடத்தில் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். நீங்கள் வாழும் வீடு, நீங்கள் ஓட்டிச்செல்லும் வாகனம் தேவனுக்குச் சொந்தமானது எனப் புரிந்துகொள்வதோடு, அவர் அதில் நம்மை தங்க இடமளிக்கிறார் என்றும் வாகனத்தை செலுத்த அனுமதிக்கிறார் என்றும் புரிந்துகொள்ள வேண்டும்.

சிறிய சோதனைபட்டியல் ஒன்று தயாரிப்போம்:

a) வங்கிக் கணக்கு
b) சொத்து (வீடு, காரியாலயம் மற்றவை)
c) தொழில் அல்லது வியாபாரம்
d) திறமைகள்
e) வரங்களும், திறமைகளும்
f) வாழ்க்கைத்துணை (மனைவி அல்லது கணவன்)
g) பிள்ளைகள்

நீங்கள் உண்மையான இயேசுவின் சீஷனாக இருக்கவிரும்பினால், நீங்கள் இப்பூமியில் பெறுமதியாகக் கருதும் அனைத்தும் தேவனுடைய பலிபீடத்தில் வைக்கப்படவேண்டும். அப்படியானால் மாத்திரமே எமது முழுமனதுடன் தேவனை அன்பு செலுத்த முடியும். மத்தேயு 5:8 இல் இயேசு சொல்கிறதான ‘‘இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்’’ என்பது இதுதான். சுத்தமான மனச்சாட்சியை கொண்டிருத்தல் மாத்திரம் போதுமானதல்ல. சுத்தமான மனச்சாட்சியை கொண்டிருத்தல் என்பது நாம் அறிந்திருக்கிற பாவங்களை விட்டுவிடுதலாகும். சுத்த இருதயம் என்பது நாம் அனைத்தையும் விட்டுவிடுதலாகும்.

சீஷத்துவத்தின் கிரயத்தை புரிந்து கொள்வதற்கு எமது பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெற்றதன் பின்பு அதிக வருடங்கள் காத்திருப்பதை தேவன் விரும்பவில்லை. இதனால் தான் இயேசு திரளான ஜனங்கள் அவரிடம் வந்தபோது சீஷத்துவத்திற்கான கிரயத்தை பற்றிப் பேசினார். மேலும், அவர் சீஷனாக விரும்பாத விசுவாசி சாரமற்ற உப்பைப் போல தேவனுக்கு பயனற்றவன் என்றுச்சொல்கிறார். (லூக்கா 14:35)

## சீஷத்துவத்திற்கான வழி

மத்தேயு 28:20 இல் இயேசு தேவனால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையையும் சீஷர்கள் பின்பற்ற வேண்டும் எனக் கட்டளை கொடுக்கிறார். இப்படியாக, நீங்கள் அவருடைய சீஷன் என்று உங்களுக்கு உறுதி காணப்படலாம். அவருடைய பிடிப்பனைகள் மத்தேயு 5,6,7 அதிகாரங்களின்படி, அவருடைய கட்டளைகளை வாசிப்பது

மாத்திரமல்ல அதற்குக் கீழ்ப்படிவதும் அவசியமானது என்பதை புரிந்து கொள்ளலாம்.

> யாக்கோபு 1:22-25 : *அல்லாமலும், நீங்கள் உங்களைவஞ்சியாதபடிக்குத் திருவனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாத வனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான். அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிரமால், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.*

***சீஷனானவன் மற்றவர்களுக்கு கற்பிக்கும் முன்பதாக தான் கற்றுக்கொள்கிறவானகவும், பின்பற்றுகிறவனாகவும் இருக்கவேண்டும்.***

என்னை வருத்துகிற காரியம் என்னவென்றால், திரளான ஜனங்கள் தங்களை மறுபடி பிறந்த கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவை எந்தவழியிலும் பிரதிபலிக்காதவர்களாகவே இருக்கிறார்கள். இதனாலேயே சபையானது விசுவாசிகளை சீஷர்களாக மாற்றமடையச் செய்வதில் தோல்வியை காண்கின்றது.

யார் இயேசுவினுடைய சீஷனாயிருக்கக்கூடும் அல்லது யார் சீஷனாயிருக்கக்கூடாது என்று கண்டோம். இனி நாம் அவருடைய சீஷர்கள் என்று உலகம் எப்படி அறிந்து கொள்ளும் என்று பார்ப்போம். இயேசு யோவான் 13:35 இல் இப்படியாக விபரிக்கிறார்: *நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்: நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.* இன்று உலகில் ஒவ்வொரு கிறிஸ்தவனது வாழ்விலும் இந்த வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்களா? கிறிஸ்தவ வாழ்க்கையானது வேதாகமத்தை வாசிப்பதையும், ஆலய ஆராதனையில் சமூகமளிப்பதையும், அந்நிய பாஷை பேசுவதையும், மலைகளை பெயர்க்கத்தக்க விசுவாசத்தையும், தசமபாகம் செலுத்துவதையும், பாடல் பாடுவதையும், தேவனுடைய காரியங்களுக்காக ஓடுவதையும் மாத்திரம் உள்ளடக்குவதில்லை. இயேசு கூறிய சரியான செய்தியிலிருந்து நாம் எவ்வளவு விலகியிருக்கிறோம் என்று பாருங்கள்.

மற்றவர்களிடத்தில் நீங்கள் காட்டும் ஆர்வமான அன்புதான் நீங்கள் இயேசுவினுடைய சீஷன் என்பதை அடையாளம் காட்டும். சுவிசேஷக்கூட்டங்களுக்கூடாக ஜனங்களை கிறிஸ்துவினிடத்திற்கு கொண்டு வந்து, சீஷர்கள் தங்களுடைய அன்பை ஒருவருக்கொருவர் தெரிவித்தும் கொள்ளும் இடமாகிய சபைக்கு, அவர்களை வழிநடத்தவேண்டும்.

இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் அவர்களுடைய ஊழியத்தை எப்படி செய்தார்கள்? திரளான ஜனங்களை அவர்கள் போஷித்து, அதன்பின்பு தேவனுடைய வார்த்தைகளை கற்பித்து தேவனுடைய கோட்பாடுகளை அவர்கள் பின்பற்றுவதை உறுதிப்படுத்தினார்கள். யோவான் 6 அதிகாரம் என்னுடைய பிரசங்கங்களில் நான் அதிகமாய் தியானிக்கும் பகுதியாகும். நான் நினைத்தேன் இயேசு டிவிடி அல்லது சீடி (DVD/CD) செய்திருந்தால், அநேகர் அதை வாங்கியிருக்க மாட்டார்கள் அல்லது ஒன்லைனில் (online) அதை பார்த்திருக்கமாட்டார்கள்.

இயேசு 5000 ஆண்களில் ஆரம்பித்து (யோவான் 6:2) 11 சீடர்களுடன் விட்டுச்சென்றார்(யோவான் 6:70). எப்படியாயினும் திரளான ஜனங்கள் அப்பமும் மீனும் சாப்பிட்டார்கள், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்படி சொல்லியபோதோ அவைகள் கடினமான பிரசங்கங்கள் என்று விட்டுச்சென்றுவிட்டார்கள். (யோவான் 6:60, 66) அவர்கள் ஏன் அதைச் செய்யவில்லை என ஆழமாய் கிரகிக்கப்போவதில்லை. ஆனால் எமது கிரியைகளை இப்போது ஒருமிக்கச்செய்வோம்.

சபையின் தரத்தைவிட சபையின் எண்ணிக்கையில் நாம் அதிக கவனமுடையவர்களாக இருக்கிறோம். நாம் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை உலக வழக்கப்படி மதிப்பிட்டால் அது பாரிய தோல்வியை கொண்டுவரக்கூடும். ஏனென்றால் அவரால் 11 சீஷர்களை மாத்திரமே அவருடைய மூன்றரை வருடகால ஊழியத்தில் உருவாக்க முடிந்தது. அதேவேளை இந்த 11 பேரும் உலகத்தை கலக்கியவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இந்தப் படிப்பினையானது மதுபோதையில் ஆரம்பம் தெரியாத கிரியைகள் போன்ற நடத்தை மாற்றமலல. இது ஆவிக்குரிய மாற்றம்! தேவன் அவருடைய கிருபையால் உங்களுக்கு உதவுவாராக.

‘‘ஜீவனுக்கான பாதை மிகவும் ஒடுக்கமானது சிலரே அதை கண்டுபிடிப்பார்கள்.’’ - நீங்கள் இந்த வழியில் செல்வதற்கு விருப்பமா?

இந்த முக்கியமான கருத்தில், நீங்கள் இன்னும் போதுமானளவு முக்கியமாக கருதவில்லையானால், இந்தப் பாடத்தை விட்டுவிட இனிமேல் தொடரவேண்டாம்!

தேவன் தன்னையும் தன் வார்த்தைகளையும் கருத்தில்கொண்டு, அதற்கு கீழ்ப்படிகிற ஜனங்களை தேடுகிறார்.

அப்படியானால் நாமும் அப்படிச்செய்வோமா!!

*வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத்தேயு 11:28-30)*

தேவனுடைய குடும்பத்திற்கு உங்களை வரவேற்கிறோம்!!